# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *2005 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சரீரதண்டனை (நீக்கச்) சட்டம்*

---

*(2005 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, ஓகத்து மாதம் 05 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 4.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2005 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சரீரதண்டனை (நீக்கச்) சட்டம்**

[2005 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ—ஓ. 55/2004
2838

**சரீரதண்டனைக் கட்டளைச் சட்டத்தை நீக்குவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம், 2005 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, சரீர தண்டனை (நீக்கச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்.

**2.** (21 ஆம் அத்தியாயமான) சரீரதண்டனைக் கட்டளைச் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

(21 ஆம் அத்தியாயமான) சரீரதண்டனைக் கட்டளைச் சட்டத்தை நீக்குதல்.

**3.** ஏதேனும் எழுத்திலான சட்டத்தில், ஏதேனும் தவறுக்காக, நீதிமன்றத்தினால் விதிக்கப்படவேண்டிய தண்டனைத் தீர்ப்பொன்றின் பாகமாக, சவுக்கடித் தண்டனைத் தீர்ப்பொன்று உள்ளடக்கப்பட்டுள்ள இடங்களிலெல்லாம் அத்தகைய சட்டம், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்தும் அத்தேதிக்குப் பின்னரும், சவுக்கடி தொடர்பான அத்தகைய தண்டனைத் தீர்ப்பின் அத்தகைய பாகம் அதிலிருந்து விட்டுவிடப்படுவதன் மூலம் திருத்தப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

சவுக்கடித் தண்டனைத் தீர்ப்பு ஏனைய எழுத்திலான சட்டத்திலிருந்து நீக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல்.

**4.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஏதேனும் ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்